**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 165/2024** Date: 26.03.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 22** |
| Name | : | சக்திவேல் |
| Father's Name | : | கோவிந்தன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 26.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொட்டாவூர், வடக்கு தெருவில் குடியிருந்து செங்கல் சூலை நடத்திவருகிறேன். எனது அம்மா கோவிந்தம்மாள் பெயரில் பிக்கிலி, புதுகடம்பு கிராமத்தில் 3 ஏக்கர் நிலம் உள்ளது. மோடி திட்டத்தின் கீழ் எனது அம்மாவின் நிலத்தில் ஆவணங்களை கொடுக்கும் பட்சத்தில் மாதம் ரூ.2000/– வரும் என கூறினர். பாப்பாரப்பட்டி வேளாண்மை அலுவலகத்திற்கு சென்று எனது ஆதார் கார்டும், எனது அம்மா பெயரிலிருந்த சிட்டா, நான் சேமிப்பு கணக்கு வைத்துள்ள பாரத ஸ்டேட் வங்கி, பாப்பாரப்பட்டி கிளை வங்கி புத்தகத்தையும் கொடுத்தேன். இரண்டு முறை தலா ரூ.2000/– எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அது வங்கியினால் மீண்டும் பிடித்தம் செய்யப்பட்டது. பிடித்தம் செய்ததற்கு காரணமாக எனது அம்மா பெயரில் தான் நிலம் உள்ளது என்றும், எனது பெயரில் நிலம் இல்லை என்றும் கூறினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 01.04.2020 ம் தேதி முதல் 30.12.2020 வரை பாரத ஸ்டேட் வங்கி , பாப்பாரப்பட்டி கிளையில் நான் பராமரித்துவரும் எனது சேமிப்பு வங்கி கணக்கின் பணபரிவர்த்தனை பட்டியல் ஆகும். **அது அ.சா.ஆ.20 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை – எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.03.26 14:44:54 +0530